உ
சிவமயம்



யாழ்ப்பாணம் வடமராட்சியைச் சார்ந்த
துன்னையம்பதியைச் சேர்ந்தவரும்
உத்தம வேளாண குலதிலகர்
இருமரபுந்துய்ய ஜெகராசா ஜெகரட்ண முதலியார்
இராசசூரிய முதலியார் வழித்தோன்றலும்
சிதம்பரப்பிள்ளை ஆழியார் ஆழ்வாயினாரின்
வழித்தோன்றலும்
காலஞ் சென்ற
திரு. க. வன்னியசிங்கம், திருமதி சிவபாக்கியம்
ஆகியோரின் அருந்தவப் புதல்வரும்

**திருமதி கா. புஷ்பவதி அவர்களின்**
**அன்புடை வாழ்க்கைத் துணைவரும்**

தேசிய வீடமைப்பு
அபிவிருத்தி அதிகாரசபை உத்தியோகத்தரும்
உயர்பதவி பெற்ற உபவேலைப் பரிசோதகருமாகிய

அமரர்

# வ. காசிலிங்கம் அவர்கள்

சிவபதமடைந்தமை குறித்த

# நினைவஞ்சலி மலர்

**25—09—1995**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர்

# வ. காசிலிங்கம் அவர்கள்

தோற்றம்,
**07-08-1953**

மறைவு:
**24-08-1995**

## திதி நிர்ணய வெண்பா

**கற்றவர்கள் போற்றுதிரு காசிலிங்கச் சீமான்**
**பொற்கயிலை எய்திப் பொலிந்தநாள் — விற்பனமார்**
**ஆண்டு யுவவதனி லாமா வணியபரம்**
**பூண்டதிர யோதசியே போற்று.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர்

# க. காசிலிங்கம் அசோகன்

தோற்றம்: 07-08-1953 மறைவு: 24-08-1995

[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# தோத்திரப் பாக்கள்

## விநாயகர் வணக்கம்

*பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.*

## தேவாரம்--திருத்தாண்டகம்

தேவார்ந்த தேவனைத் தேவரெல்லாம்
திருவடிமேல் அலரிட்டுத் தேடிநின்று
நாவார்ந்த மறைபாடி நட்டம் ஆடி
நான்முகனும் இந்திரனும் மாலும் போற்றக்
காவார்ந்த பொழிற்சோலை கானப் பேராய்
கழுக்குன்றத் துச்சியாய் கடவுளேநின்
பூவார்ந்த பொன்னடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே.

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே யாய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக்கண் ணுடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறணி சடையெம் அற்புதக் கூத்தா
அம்பொன்செய் அம்பலத் தரசே
ஏறணி கொடியெம் ஈசனே உன்னைத்
தொண்டனேன் இசையுமா றிசையே.

## திருப்பல்லாண்டு

சொல்லாண்ட சுருதிப் பொருள் சோதித்த
தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையுஞ் சிலதேவர்
சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத் திரண்மேரு விடங்கன்
விடைப் பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

அண்ண லேயெனை யாண்டுகொண் டருளிய அமுதே
விண்ணி லேமறைந் தருள்புரி வேதநா யகனே
கண்ணி னாற்றிருக் கயிலையி லிருந்தநின் கோலம்
நண்ணி நான்தொழ நயந்தருள் புரியெனப் பணிந்தார்.

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணநேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா
வெற்றிவேலாயுதப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காலஞ் சென்ற

திருவாளர் வ. காசிலிங்கம் அவர்களுக்கு

நற்கதியருளுமாறு அன்னாரின் குடும்பத்தார்

## குலதெய்வங்களை பாடிப் பராவியவை

### திக்கம் மடத்துவாசற் பிள்ளையார்

ஒற்றை மருப்புடன் ஓங்கார ரூபத் துடனிருந்து
கற்றவர் கல்லா தவரென்று கண்டு கழித்தலின்றி
வெற்றியை நல்கும் மடத்துவா சல்வாழ் விநாயகரே
மற்றுநின் பாதாம் புயந்தனைத் தந்தைக் கருளுகியே.

தம்பிக்கு வள்ளி தனைத்தர வேழ வடிவெடுத்தாய்
நம்பிப் பணிந்த நமதிடர் தீரத் துணைபுரிவாய்
அம்பொற் கரத்தினில் மோதகம் ஏந்திய ஐங்கரனே
உய்பற் கரிய உயர்பதப் பேறது தந்தருளே.

### துன்னாலை வல்லியானந்தப் பிள்ளையார்

அல்லும் பகலுமுன் பாதார விந்தத்தை அன்புடனே
கல்லும் கரைந்திடத் தோத்திரம் பாடிக் களித்தவரே
சொல்லும் விதிவந்து சொர்க்க மனையிடைச் சோர்ந்தடைந்தார்
எல்லையிற் துன்பற ஈந்தருள் வல்லியானந்த எம்மிறையே.

மின்னா முழங்கா இடியுமுண் றெந்திந்த மேதினியோர்
சொன்னா ரதன்பொருள் சொல்லாது காட்டிய தொண்டனைநீர்
துன்னும் மலர்ப்பொழில் சூழ்வல்லி யானந்தத் தூமணியே!
உன்னிய ணைத்து உயர்பதம் தந்தருள் உய்வதற்கே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செல்வச்சந்நிதி முருகப் பெருமான்

ஆற்றங் கரையில் அமர்ந்தருள் பாலிக்கும் அற்புதனே!
நோற்ற விரதங்கள் எண்ணி லடங்கா நுவலரிய
ஆற்றல் மிகுந்த தவத்துடன் தந்தை அருகணைந்தார்
ஏற்ற மளித்து இரட்சித்துன் பாதத்தை ஈந்தருளே.

பாவடி கொண்டுனைப் பாவலர் போற்றுவர் பற்பலருஞ்
காவடி தூக்கி வருவார்கர்ப் பூரக் கனல்நடுவே
மேவடி யார்வினை தீர்செல்வச் சந்நிதி வேல்முருகா
சேவடி காட்டியெம் தந்தையை நின்பதம் சேர்த்தருளே.

## பொலிகண்டிக் கந்தசுவாமி

கத்துங் கடலலை வாரி யிறைக்கும் கனகமணி
முத்தும் பவளமுஞ் சேர்ந்து குவியும் முதுநகரிற்
சித்தம் தெளியத் திருவா லயங்கொண்ட சீர்முருகா!
நித்தம் தொழுதவெம் தந்தைக்கு நற்கதி நீயருளே.

வளமோங்கு கந்த வணப்பதி நாடிநன் வன்னிமர
நிழல்வீற் றிருந்த முருகா குகாவுனை நித்தநித்தம்
உளமோங்க வந்தித்த தந்தையுன் தூய உயர்கமலக்
கழல்நாடி வந்தான் கடைக்கணித் தாண்டெமைக் காத்தருளே.

## வல்லிபுர ஆழ்வார் (வேறு)

வெண்ணெயை உண்டிட வோவுறி நாடி நடந்தனைநீ
மண்ணனையு முண்டனை மாயவ னேதிருப் பாற்கடலில்
நண்ணரு மைந்தலை நாகணை யிற்றுயில் கொண்டவனே
விண்ணுறு வாழ்வையெம் தந்தைக் கருளுதி வேண்டினமே.

தெண்டிரை நீர்ச்சுனை தோய்ந்திடு பெண்டிர் துணிகளையே
கொண்டொளித் திட்டவ கேசவ னேதண்டு சக்கரத்தாய்!
பண்டு புரிந்த வினையத னாலலுக் துன்னடியே
கண்டு பணிந்துன் கழலடி சார்ந்தனன் காத்தருளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேரிசையாசிரியப்பா

இந்துமா கடலின்கண் முத்தென இலங்கும்
செந்தமிழ் ஈழ அன்னையின் சிரமென
மிளிருயாழ்ப் பாண மேதகு நாட்டின்
ஒளிர்முக மாயுயர் வடம ராட்சியில்
திலகமாய்த் திகழ்ந்து தீந்தமிழ் கொழித்து
கன்னலும் செந்நெலும் கலந்தொளிர் ஊராம்
துன்னையம் பதியில் தன்னிக ரின்றி
மாபலா வாழை மாண்புடன் மலிந்து
முக்கனி சிந்தி மொய்வளம் ததும்பும்
வித்தகர் போற்றும் விழுமிய தோட்டமும்
தண்ணறும் பசுமைமகூர் தகைசால் வயல்களும்
எண்ணரும் பனையும் இன்சுவைத் தெங்கும்
விண்ணுற உயர்ந்து தண்ணிழல் பரப்பும்
எழிலார் சூழலில் ஏய்ந்தநல் லிடத்தில்
கன்னனேர் கொடையான் வன்னிய சிங்கமும்
அன்னமென் நடையாள் புஷ்ப வதியும்
ஆற்றிய இல்லற அரும்பே றதனால்
தோற்றிய காசி லிங்கமாம் தோன்றல்
வளர்மதி யென்ன வளர்ந்திடும் போது
காசி நாதர்வித் தி யாலயஞ் சென்று
ஆரம்பக் கல்வியை அமைதியாய்க் கற்று
திருஇரு தயக்கல் லூரி சேர்ந்து
உயர்கல்வி பயின்று உயர்வுபெற் றிடுநாள்
வளம்மிகச் சிறந்த வவனிக் குளத்தில்
பலநோக்குக் கூட்டுறவுப் பண்புசால் சங்கத்தே
எழுது வினைஞராய்ச் சேவையாற் றியபின்
திகழுநல் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி
அதிகார சபையில்வீ டமைப்பதி காரியாயும்
பற்பல வாண்டின்பின் பதவி உயர
உபவேலைப் பரிசோதகராய் உத்தியோகம் பார்த்தே
பண்பின் சிகரமாய் வாழ்ந்தன ரன்றே
பூவைநேர் நல்லாள் புஷ்ப வதியை
அந்தணர் போற்ற அங்கியின் முன்னர்
அந்தமி லன்புடன் அருமணம் புரிந்து
இல்லற மாகிய நல்லற மாற்றுநாள்
அருளமிகப் பெற்ற கிருபா கரனும்
நேரிலாக் கலைபயில் வாருணி மற்றும்
கிளர்மதி யெனவளர் கிரிதர னுதியோர்
மக்களாய்த் தோன்றி மாநிலம் புகழ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக்குயர் புகழொடும் மிளிர்கின் றார்களே
நற்குணக் குன்றும் நல்ல தம்பியும்
திருமிகப் பெற்ற தேவ ராசாவும்
சால்புமிக் குயர்ந்த சகோதர ராவரே
தண்மதி வதனத் தன்லட் சுமியும்
வசந்த மலர்நிகர் வசந்தா தேவியும்
நற்றமிழ் போற்றும் நகுலேஸ் வரியொடு
திகழ்கலை மிக்க தேவ ராணியும்
ஆதரவு மிக்க சோதரி மார்களே
உத்தம குணஞ்சால் உதய குமாரனெனும்
வித்தகன் சகலனாய் சார்ந்து வாழ்ந்தாரே
தன்னிக ரில்லாத் தனுஷாந் தோடு
அன்ன மெனமிளிர் லதாங்கனி யாகியோர்
பெறாமக்க ளாகப் பெரிதுவந் தனரே
புவியுளோர் போற்றும் புஷ்பரா சாவும்
சாந்தம் மிக்கொளிர் சற்குண ராசாவும்
இத்தலம் புகழும் மைத்துன ராவரே
விழுமிய குணஞ்சால் விமலாம் பிகையொடு
கலைமக ளெனமிளிர் கலாவதி யாகியோர்
மைத்துனி மாராய் மகிழ்ந்து வாழ்ந்தாரே
கீர்த்திசால் கிருஷ்ண பிள்ளையாம் சிமான்
மாமனா ராக மருவி வாழ்ந்தாரே
சீலமார் செல்வி செல்லம்மா தானும்
மாமியா ராக மகிழ்வுற் றாரே
குற்றமொன் றிலலாக் குருநா தன்னொடு
கற்றவர் மெச்சும் கிருஷ்ண பவானும்
நற்றமிழ் போற்றும் நவரத் தினமும்
இத்தலம் புகழும் மைத்துன ராவரே
எழில்மிகச் சிறந்த இராகுல னோடு
உத்தம குணமுடை உமையாள் மற்றும்
மாசிலாப் புகழ்மிகு கேசவன் இன்னும்
நானிலம் வியக்கும் நவநீ தன்னொடு
வீரியம் மிக்க சூரியா சந்தியா
சீர்மிகப் பெற்ற சிந்துயா வாகியோர்
மாநிலம் போற்றும் மருமக்க ளாவரே
கீர்த்தியிற் சிறந்த கிருபா லட்சுமியொடு
பூமக ளெனமிளிர் யாமினி யாகியோர்
பெறாமக்க ளாகும் பேறுபெற் றனரே
இத்துணைச் சுற்றமும் ஒருங்கே இணைந்த
வித்தகன் காசி லிங்கமாம் கனவான்
தெய்வ பத்தியிற் திளைத்திடும் மேலோன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவராத் திரிமுதல் நவராத் திரியும்
கந்த னருள்கூர் கந்த சட்டியும்
விரதமாய் நோற்று விளங்கின னன்றே
கற்றவர் கல்லா தவரொடும் கலந்து
உற்றார் உறவினர் யாரையும் பேணி
வள்ளலாய் விளங்கி வாழ்ந்தன ரன்றே
உலகம் புகழும் யுவவாண் டதனில்
யாவரும் போற்றும் ஆவணி மாதத்து
அபர பக்கத் திரயோ தசியில்
பொன்னே ருடலம் பொங்கெரி யுண்ண
மின்னார் செஞ்சடை யண்ணல்
பொன்னார் கயிலை புக்கன னன்றே.

கலித்துறை (கவிக்கூற்று)

நம்பி யிருந்தநல் நாயகி ஏங்கி நலிந்துதினம்
கும்பியில் தீயெழத் தன்வாழ் வை யெண்ணிக் குழந்தையைப்போல்
வெம்பி யழவிட்டு விண்ணாட்டு வாழ்வை விரும்பினையே
அம்புவி போற்றும் அறிஞ உனக்கி தழகல்லவே.

வீட்டுக்கு வந்ததும் வாவென் றழைத்து விருந்தளித்து
நாட்டுக் கதைகளைப் பேசி நயமுடன் நின்றவரே
கூட்டைப் பிரித்திறை தன்பதம் போயினை கூடியழும்
வாட்டம் தவிருதல் இல்லை வளர்துயர் வாய்த்ததுவே.

---

# இரங்கற் பாக்கள்

## மனைவி புஷ்பவதி புலம்பல்

வாய்விட் டுரைத்ததிரு வாசகம் மீறத் தெரியேன்
நாய்போல் பணியன்றி நான்வேறு தொண்டறியேன்
பேய்போல விங்கிருந்து பேதலித்து நான்கதற
நீபோன மாயமென்ன நீதியிதோ ராசாவே.

குங்குமம் தீட்டாமல் கோலமஞ்சள் பூசாமல்
மங்கிலியம் கட்டாமல் மலர்சிகையில் சூடாமல்
தங்கநிறக் கூறை சாத்திவெளி போகாமல்
இந்தவகைக் கென்னகுறை என்துரையே செய்தேனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மூத்தமகன் கிருபாகரன் பிரலாபம்

தெள்ளுதவத் தாலிந்தப் புவியிற் பெற்றே
தேனமுத மூட்டியிரு கரத்தா லேந்தி
விள்ளுகலை யூட்டி மதியூட்டி மேலாய்
விளங்குமுயர் செல்வமெலாம் விளங்க நாட்டிக்
கொள்ளுபுகழ் ஈட்டிவைத்த தந்தைக் கோநாம்
குடமுடைத்துக் கொள்ளிசிர மேலேற்றி
அள்ளியிட்டேன் வாய்க்கரிசி ஐயோ அப்பா
ஆகொடியோம் என்செய்தோம் அவனி மேலே.

### இளையமகன் கிரிதரன் பிரலாபம்

தந்தைமகற் காற்றுதவி எல்லாம் செய்தாய்
தாரணியில் நாம்பாவி உமக்குச் செய்யும்
அந்தமுறும் பணிமுழுதும் செய்யா முன்னம்
ஆவிவிட்டாய் ஐயையோ எம்பிதாவே!
சந்தமுறு நின்மேனி காண்ப தென்றோ
தரளமலர் வாய்மொழியைக் கேட்ப தெப்போ
பந்தமிகு பூவுலகில் கொடுத்து வையாப்
பாவிகள்நாம் என்செய்வோம் ஐயோ ஐயோ.

### ஏகபுத்திரி வாருணி புலம்பல்

**(வேறு)**

கண்ணின் மணிபோலக் கர்தலுடன் பெற்றெடுத்தே
வண்ண மடிமேல் வளர்த்தசுகம் நாம்மறவோம்
பொன்னை நிலத்தை மற்றும் பூங்கலைக ளோங்கவைத்த
அன்பை நினைந்துருகி வாடுகின்றோம் ஐயையோ.

### மைத்துனர்மார் புஷ்பராசா, சற்குணராசா பிரலாபம்

**(வேறு)**

நாட்டுக் கொருமணியாய் நல்வினத்துக் கோர்துணையாய்
வீட்டுக் கொளிவிளக்காய் வீற்றிருந்தாய் — வாட்டந்தீர்
மைத்துனரே எம்மை மறந்திரோ ஐயையோ
எத்தினத்திற் காண்போம் இனி.

### மாமன், மாமி கிருஷ்ணபிள்ளை, செல்லம்மா பிரலாபம்

**(வேறு)**

பாயிற் படுக்காமல் பாலமுதங் கொள்ளாமல்
நோயில் வருந்துவதை நோக்கிச் சலிக்காமல்
வாயி லிருந்தொருசொல் வாசகத்தைக் கூறாமல்
தீயிலே வெந்ததுயர் தீருமோ மருமகனே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெறாமக்கள் தனுஷாந், லதாங்கனி புலம்பல்

(வேறு)

அறந்தழுவித் தவங்கிடந்திங் செம்மைப் பெற்ற
அரியபெற்றோர் தம்மினும்பே ரன்புவைத்தே
பிறந்தமுத லிதுவரைபே ரன்பு காட்டும்
பெறாத்தந்தை இறந்துபடப் பெருமையோடே
சிறந்தசிலைக் கோயில் கட்டிச் சேவிக்காமல்
தீயிலிட்டுத் திருமேனி வேகவைத்த
மறங்கிடந்த பாவிகளென் றூரார் பேச
மண்ணுலகில் வாழ்கின்றோம் ஐயோ ஐயோ.

## சகலன் உதயகுமார் பிரலாபம்

கல்லடுக்கித் திருப்பணிசெய் கோயி லுள்ளே
கடவுளைநாம் காணவில்லை கண்டதெய்வம்
நல்லொழுக்கம் அன்புருவம் என் அன்பரே
நாளுமுனை மனத்திருத்திப் போற்றி வாழ்வோம்
சொல்லடுக்கிக் கவிதைசெய வல்லேமாயின்
தூயதொரு காவியமே செய்வோம் கெட்ட
புல்லருக்கும் புன்சிரிப்பே காட்டும் தெய்வம்
போனதுயர் தாங்கோமே ஐயோ ஐயோ.

## மைத்துனிமார் கலாவதி, விமலாம்பிகை புலம்பல்

கையெடுத்துக் கும்பிட்ட கோயி லெல்லாம்
காடாகிப் போனதுவோ களங்கமின்றிச்
செய்ததவம் வீணாச்சோ ஆடி வந்த
தீர்த்தமெலாம் பாழாச்சோ நம்பிநின்ற
தெய்வமெல்லாம் கைவிடுத்து மறைந்த தோவெம்
செல்வமலி மைத்துனரே ஐயோ ஐயோ
வையகத்தில் மின்னாம விடி யிடித்த
வாறுமறைந் தேகியதேன் வழுத்து வாயே.

## சகோதர சகோதரிமார் பிரலாபம்

நல்லதம்பி, தேவராசா, தனலட்சுமி, வசந்தாதேவி,
நகுலேஸ்வரி, தேவராணி

(வேறு)

உடலெடுத்த நாள்முதலாய் எம்மரிய
சோதரரே ஒருநா ளேனும்
கடுகடுத்துப் பேசாத பண்பினையும்
நின்சிரித்த கனிவாய் கண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுமுடிச்சுப் போட்டானோ பாழியமன்
பகடேறிப் பறித்திட் டானோ
இடியிடித்தாற் போலவையோ ஏங்கிலமே
எங்குற்றாய் சோதரரே ஐயோ ஐயோ.

## மருமக்கள்மார் பிரலாபம்

வலம்புரியின் முத்துப் போல் வந்துதித்தாய்
வனப்புடைய எங்குடிக்கோர் தீபமானாய்
தலம்பலவும் கொண்டாடும் தகைமை பெற்றாய்
சற்சனர்க்கோர் தலைவனெனும் சங்கை பூண்டாய்
குலங்கல்வி அறிவாற்றல் யாவும் கொண்ட
கோமானே! மாமாவே எம்மைவிட்டுக்
கலங்கவிழ மாலுமிதான் கடலிற்பட்ட
கலக்கம்போற் கலங்கவிட்டுக் கதியுற்றாயே

## மறுமைத்துனர்மார் பிரலாபம்

குலம்விளங்கக் குடிவிளங்கக் கொற்ற மோங்கக்
கோயிலெல்லாம் தொழுதுநின்ற பேறு தேங்க
நலம்விளங்க நடுவிளங்க நவிலுங் கீர்த்தி
நாற்றிசையும் போய்விளங்க நாம்கலங்க
தலம்விளங்கத் திருமால்போல் அவதரித்த
தண்ணளிசால் மைத்துனரே! தேவதேவன்
புலம்விளங்க நாம்புலம்பப் பூமி வாடப்
போயினையே நீதியிதோ ஐயோ ஐயோ.

## உற்றார், உறவினர், ஊரவர் பிரலாபம்

உடையிழந்தோன் கைபோல உதவி நின்றாய்
உடன்பிறந்தார் போலெம்மோ டொத்து வாழ்ந்தாய்
தொடைசிறந்த மார்பசையத் துளங்கி யார்த்தாய்
துயரிலுநற் களிப்பிலுமே தொடர்பு கொண்டாய்
புடையிருந்து மதியுரைத்துப் புகழுங் கண்டாய்
புண்ணியனே! கண்ணியனே! ஐயையோவெம்
இடையிலின்னும் பல்லாண்டு வாழவையா
தேமனுனைப் பறித்தெடுத்தா னென்செய்வோமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரங்கற் செய்திகள்

# காசினியில் வாழ்வைத் துறந்த அமரர் வ. காசிலிங்கம்

(உபவேலைப் பரிசோதகர்)

பல காலம் எம்முடன் பணியாற்றி அகாலத்தில் எம்மை விட்டுப் பிரிந்த காசிலிங்கம் இன்பத்திலும் துன்பத்திலும் இனிய முகம் காட்டும் ஓர் மனிதன். மேல் அதிகாரிகள் கடிந்து பேசினும் வாயில் புன்சிரிப்பு மாற்றாது அன்பும் பண்பும் அமைதியுமுடைய நீ எம்மனங்களை எல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு ஆவியாகிப் பறந்துவிட்டாய். நீ இறந்த செய்தி கேட்டுத் துடித்த எம் மனங்கள் இன்னும் ஆறவில்லை. உன் ஆத்மா சாந்திபெற என்றும் ஆண்டவனை வேண்டுகின்றோம்.

— மாவட்ட முகாமையாளரும்
ஊழியர்களும்
தேசிய வீடமைப்பு அபிவிருத்தி
அதிகாரசபை, யாழ்ப்பாணம்.

---

ஒருதாய் வயிற்றிற் பிறந்த சகோதரர்கள் போலக் கூடிக் குலாவி, உண்டு உடுத்து ஓரிடத்தில் வாழ்ந்தாய்.

கருணையில்லாத காலன் பாம்புருவத்தில் வந்து அமரர் திரு. வ. காசிலிங்கத்தின் உயிரைப் பறித்துச் சென்றான்.

நெருப்பில் விழுந்த புழுப்போலத் துடிதுடித்து வருந்திளேம். விதிசெய்த சதியால் வேதனை அடைந்தோம். அந்தோ! பாழும் விதியே!

அமரர் திரு. வ. காசிலிங்கத்தின் பிரிவு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

— மாவட்ட முகாமையாளரும்
ஊழியர்களும்
தேசிய வீடமைப்பு அபிவிருத்தி
அதிகாரசபை, கிளிநொச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேற்றம்

முன்னாளிற் புகழ்பெற்றே துலங்கா நின்று
முடிசூடி யரசாண்ட தருமராதி
மன்னாதி மன்னரெல்லாம் மாண்டே போனார்
மாநிலத்தின் வாழ்வதுதான் கானல்நீ ரென்றே
உன்னுமறை யாகமங்கள் உரைத்த லாலே
உயிரகல் காசிலிங்க உத்தமர்க்காய்
மண்ணுலகில் அழுவதெல்லாம் வீணே யென்று
மனத்திருத்தித் துயர்தவிர்ந்து வாழ்க நன்றே.

**ஆக்கம்: பண்டிதர் R. K. முருகேசு**

---

## நன்றி நவிலல்

திருவாளர் வ. காசிலிங்கம் அவர்களின் மறைவின்போதும் அந்தியேட்டிக் கிரியைகளின் போதும் சமுகம் தந்து பங்குபற்றியவர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும், இன்னும் பலவித ஒத்துழைப்பு, உதவி நல்கியவர்களுக்கும் எமது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

காலஞ் சென்ற
வ. காசிலிங்கம் அவர்களின்
குடும்பத்தார்

திக்கம்,
25. 09. 95.

---

தமிழ்ப்பூங்கா அச்சகம் - நெல்லியடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org